**குளியாப்பிட்டி பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குளியாப்பிட்டி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான குளியாப்பிட்டி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2023 ஏப்ரல் 24 இல் களஞ்சியத்தில் பெறப்பட்ட ரூபா 58,000 பெறுமதியான 04 UPS கள் எந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறோம். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 2023 சனவரி 01 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதியின் கடன் கொடுத்தோர் மீதிக்கும் பட்டியலிற்கும் இடையிலான ரூபா 159,466,238 தொகையான வித்தியாசங்கள் மீதி உறுதிப்படுத்தல் இன்மையால் பதிவழிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோட்டார் காடரின் பெறுமதி ரூபா 3,225,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 350,000 பெறுமதியான தண்ணீர் பவுசர் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறோம். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 79,500 பெறுமதியான காணியின் பிரதான பமட் சபையில் பௌதீக ரீதியில் இல்லாதிருந்ததுடன் ரூபா 248,965 பெறுமதிான 07 குப்பை தொட்டிகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இறுதி நாளில் உள்ளவாறு ஊழியர் கடன் கணக்கில் காட்டப்பட்ட மீதி ரூபா 24,637,905 ஆகு இருந்ததுடன் தொடர்புடைய பட்டியலின் மீதி ரூபா 24,372,504 ஆக இருந்துடன் விததியாசம் ரூபா 265,401 ஆக இருந்தது. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொடர்புபட்ட பட்டியல்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** இலங்கை சனநாக சோசலீச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| **(i)** F.R. 570 | ரூபா 9,000 தொகையான வீட்டு வாடகை ரூபா 345,640 தொகையான 06 கைத்தொழில்கள் வைப்புகள் என்பன நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | | | |
| **(i)** விதி 61 | வருடாந்த அளவை நடாத்திய பின்னர் பெறப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்ட சகல செயற்திட்டங்களும் செயற்திட்ட வரி பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், பதிவேட்டில் செலுத்தப்படுகின்ற கட்டணங்களை மாத்திரம் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வரியற்ற செயற்திட்டங்கள் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | உரிய விதி அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ii)** விதி 218 | காணி மற்றும் கட்டிடங்களின் வருடாந்த கணிப்பீடு விதியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | குழுவால் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை | | |
| (இ) **உள்ளூராட்சி சுற்றறிக்கை** | | | |
| **(i)** 2018/07/19 ஆந் திகதிய 2018/உள்ளூராட்சி/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | நாட்டின் பிரஜைகள் ஒன்லைன் மூலம் விண்ணப்பம் சமர்ப்பிப்தற்கும் கொடுப்பனவை மேற் கொள்வதற்கும் வசதியளிக்கப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ii)** 2015/11/02 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை. | வீதி விளக்கு பதிவேடு நாளதுவரையாக வைத்திருக்கவில்லை. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 53,217,456 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 63,416,758 ஆகும்.

### 2.2. வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ஆண்டு 2023 | | | | ஆண்டு 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப் பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம்** | **பட்டியலி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்ப ட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | ரூபா.000' | ரூபா000'. | ரூபா000'. | ரூபா000'. | ரூபா000'. | ரூபா000'. | ரூபா000'. | ரூபா000'. |
| வீதவரியும் வரியும் | 3,750 | 4,329 | 4,474 | 798 | 3,609 | 3,851 | 3,797 | 887 |
| வாடகை | 11,871 | 11,136 | 11,130 | 2 | 10,984 | 10,537 | 10,556 | 5 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,163 | 1,041 | 1,104 | - | 1,160 | 1,064 | 1,064 | - |
| ஏனைய வருமானம் | 21,201 | 10,501 | 10,502 | 164 | 15,669 | 18,785 | 17,867 | 330 |
| மொத்தம் | 37,985 | 27,007 | 27,210 | 964 | 31,422 | 34,237 | 33,284 | 1,222 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த வரி நிலுவை மீதி மற்றும் ஏக்கர் வரி என்பன முறையே ரூபா 554,764 மற்றும் ரூபா 243,365 ஆக இருந்தது. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | நிலுவை வரிகள் மற்றும் குத்தகை வாடகைகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாணசபை பிரதம செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரிகள் முறையே ரூபா 17,239,937 மற்றும் ரூபா 81,676,048 ஆக இருந்தது. | -மேற்படி- | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரிகளை சேகரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமாக பத்தெக்பது குத்தகைக்கு விடக்கூடிய காணிகள் மற்றும் 08 குத்தகைக்கு விடக்கூடிய ஆதனங்கள் என்பன ரூபா 524,340 ஆன குறைந்த பெறுமதியுடைய கேள்வியுடன் 2023 இல் குத்தகைக்கு விடப்பட்டு வருமானம் உழைத்திருக்கவில்லை. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | வருமானம் உழைப்பதற்காக பயன்படுத்தப்பட வெண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச்சட்டத்தால் உடமையாக்கப்பட்ட பணிகளின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 601,490 ஆன மூலதனச் செலவினம் மற்றும் ரூபா 676,773 ஆன மீண்டெழும் செலவினம் திண்ம கழிவு முகாமைத்துவத்திற்காக ஏற்பட்டிருந்த போதிரும் ரூபா 75,050 கழிவு விற்பனை வருமானமாக ஏற்பட்டிருந்தது. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | நுண்ணியல் மற்றும் நுண்ணியலற்ற கழிவு ஆதனத்தை முகாமை செய்வதற்கும் வருமான உருவாக்க நடவடிககைகளை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 09 கணக்குகளின் மொத்த பெறுமதி ரூபா 115,184,826 ஆக இருந்தது. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | பெறவேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 16 கணக்குகளின் மொத்த பெறுமதி ரூபா 60,103,391 ஆக இருந்தது. | -மேற்படி- | செலுத்த வெண்டிய மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபை செயற்திட்டத்தின் வருடாந்த கணப்பீட்டு சபை நடாத்தப்பட்டிருக்காமையால் முறையான வழியில் வியாபார தாபிப்புகள் சபை அந்த வருமானத்தை உழைக்க அல்து அதற்கு மேலதிக கிரயம் ஏற்பட்டோ இருக்க முடியும் என் வருமானம் உழைக்கும் சந்தர்ப்பத்தை இழந்திருந்தது. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | செயற்திட்ட வியாபார அமைப்பக்களின் அளவை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(d)** | பல்வெறு காரணங்களிற்காக சபையால் நிராகரிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் மீது தொடர் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் நிர்மாணங்கள் பூர்த்தியாக்கப்பட்டதா இல்லையா எனக் கண்டுபிடிப்பதற்கு முறையான மற்றும் போதிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | கட்டிய விண்ணப்பங்கள் தொடர்பில் முறையான மற்றும் பொதிய நிகழ்ச்சித் திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். |

## 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையானது சபை வாகன தரிப்பிடத்தின் ஆம் இலக்க ஜீப் தரித்திருந்த பற்றுச்சீட்டு அல்லத அத்திகதியில் ஏதாதவு தகவல்கள் வைத்திருக்காததுடன் 2013 இலிருந்து பயன்படுத்தப்பட்டவை வெளிப்பட்டது. இந்த வாகனத்திற்காக பேணப்பட்ட சம்பவ குறிப்பு புத்தகத்தின் பிரகாரம், ஜீப் தற்போது மிகவும் பயனற்ற நிலையில் உள்ளதுடன் இது தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | பயன்படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுககப்பட வெண்டும். |
| (ஆ) | பிரதேச சபையால் பேணப்பட்ட இரண்டு ஆரம்ப பாடசாலைகள் 15 குழாய் கிணறுகள் செயற்பாடற்று இருந்ததுடன் பழைய பிரதேச சபை கட்டிட வளாகத்தில் இதன் உபகரணங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | பயன்படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுககப்பட வெண்டும். |

## 3.4 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காணி கட்டிடங்கள், தளபாட உபகரணங்கள் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களிற்கான நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரை பேணப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான வீதி விளக்குகள் இலக்கம் இடப்பட்டிருக்காததுடன் 2022 இன் பின்னர் ஆவணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | சபையால் பயன்படுத்தப்பட்ட 02 கப் வாகனங்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிளின் உரிமையாண்மை சபையால் பெணப்பட்ட 107 மைதானங்களில் 102 இன் உரிமையாண்மை 64 குழாய் கிணறுகளுள்ள காணியின் உரிமையாண்மை கித்தலவ சத்திபொல காணியின் உரிமையாண்மை நூலகம் அமைந்திரந்த காணியின் உரிமையாண்மை என்பன மீளாய்வாண்டு இறுதிவரையும் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | சபையின் சொத்துக்களின் உரிமையாண்மையை முறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இரண்டு உழவு இயந்திரத்திற்கு இணைக்கப்பட்ட மோட்டோர் காடர் மற்றும் இரண்டு வெள்ளை இருப்பு பவுசர் என்பன மோட்டார் பொக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | உரிய சட்ட அமைப்பகளுடன் பதிவுசெய்யப்பட வெண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையின் அனுமதிக்க்பபட்ட பதவியணியில் 16 வெற்றிடங்களுட் 30 மிகைகளும் இருந்தன. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | உத்தியோகத்தர் தேவைகள் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது மீளாய்வாண்டு தொடர்பில் செயற்படுத்தப்பட வேண்டிய வேலைகளை உள்ளடக்கிய செயல் நடவடிக்கை திட்டம் தயாரித்திருந்த போதிலும் இனங்காணப்பட்ட 24 குறித்தொதுக்கிய நடவடிக்கைகளிக் 6 நடவடிக்கைகளின் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடையில் இருந்தது. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | செயல் நடவடிக்கை திட்டத்தின் முன்னேற்றம் விருத்தி செய்யப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 04 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் 25 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான முரண்கள் இருந்ததுடன் 04 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கும் உள்ளபடியாக செலவினத்திற்கும் இடையில் 20 சதவீதத்திற்கும் மேலான முரண்கள் இருந்தது. | அவதானிப்பகளுடன் உடன்படுகின்றோம். | ஆண்டின் தொடக்கத்தில் வருமானம் மற்றும் செலவின எதிர்வு கூறல்மூலம் பாதீடு தயரிக்கப்பட வேண்டும். |